www.tamilarangam.net

- Com. Vimalanathan -

விலை ரூபா 2/=

# முன்னணிச் செய்தி

இதழ் 6 செப்டெம்பர் 1985 பக்கங்கள் 12

**மறுக்கிறோம்! கண்டிக்கிறோம்!**

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்ற கொள்ளை, காங்கேசன்துறை டாக்டர் ராஜேந்திரா வீட்டில் நடைபெற்ற கொள்ளை என்பவற்றையும் எமது ஸ்தாபனத்தையும் சம்பந்தப்படுத்தி செய்யப்படும் பிரச்சாரம் பொய்யானதும் அபாண்டமானதும் ஆகும். இதைநாம் உறுதியாக மறுக்கிறோம்.

இக் கொள்ளைகளில் எம்மை சம்பந்தப் படுத்துவது உண்மையான கொள்ளையரை தப்பிப் போகவே வழி செய்யும், இது எமது அமைப்பின்மீது சேறு பூசுகின்ற திட்டமிட்ட சதி நடவடிக்கை என கண்டிக்கிறோம்.

ஸ்ரீலங்கா இனவெறி அரசினை எதிர்த்து

நீதிகோரி

## வெலிக்கடைச்சிறையில் விடுதலைப் போராளிகள்

# சாகும்வரை உண்ணாவிரதம்!

கடந்த ஒன்றரை வருடங்களாக எவ்வித விசாரணையுமின்றி 'பயங்கரவாதிகள்' என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தங்காலைச் சிறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட விடுதலைப் போராளிகள் கடந்த மாதம் முதல் வெலிக்கடை சிறையில் சாகும்வரை உண்ணாவிரதப போராட்டத்தை நடாத்தி வருகின்றார்கள். ஸ்ரீலங்கா இனவெறி அரசின் கொலைவெறிபிடித்த பாசிசக் கரங்களால் குரூரமாக சித்திரவதைக் குள்ளாக்கப்படும் இந்தப்போராளிகள் நீதி கோரி வெலிக்கடையில் நடாத்திவரும் உண்ணாவிரதப் போராட்டம் தமிழீழமடங்கிலும் ஏன் சர்வதேச அரங்கிலும் அரசுக்கு புதிய நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசு ஒருபுறம் விடுதலைப் போராளிகளுடன் சமரசத்திற்காக பேச்சுவார்த்தை நடாத்துவதாக பாசாங்கு செய்தவண்ணம் மறுபுறத்தில் தனது காட்டுமிராண்டி இராணுவத்தின் மூலம் தமிழ்பேசும் மக்களை கொன்று குவித்து வருகிறது. வவுனியாவிலும் திருமலையிலும் வெறிபிடித்த ஓநாய்களாக, ஸ்ரீலங்கா இராணுவம் பிணமலைகளை உருட்டி வருகிறது.

தமிழீழத்தின் தேசிய விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலங்களிலிருந்து தமிழர்களை கொன்று குவிப்பதில் இலங்கை அரசு கடைப்பிடித்துவரும் தீவிரம் புதுமையானதல்ல. தென்னாபிரிக்க நிறவெறியர்களை தோற்கடிக்கும் விதத்தில் இந்த அரசின் படுகொலைகள் மலிந்துவிட்டன. போர்நிறுத்தம் என்று ஒப்புக்கு சொல்லிவிட்டு, விடுதலை இயக்கங்களுக்குப் பதில் அப்பாவி மக்களை கொலை செய்துவருகிறது.

கடந்த ஒன்றரை வருடங்களாக தங்காலைச் சிறையில் சிறைக் கம்பிகளுக்குள்ளே சித்திரவதைக் குள்ளாக்கப்பட்ட விடுதலைப் போராளிகள் பின்னர் 83 யூலைப் படுகொலைகளால் வரலாற்றுப் புகழ்பெற்ற வெலிக்கடைக்கு மாற்றப் பட்டுள்ளார்கள். நீதிவிசாரணை எதுவும்இன்றி தொடர்ந்து துன்புறுத்திவரும் அரசின்

2ம் பக்கம் பார்க்க.

புத்தூர் விவசாயிகளின்

## நிலஉரிமைப் போராட்டம் வெற்றி!

புத்தூர் கிராமத்தில் காலங் காலமாக வறிய கூலி விவசாயிகள் குடியிருந்து வந்த நிலத்தின் சொந்தக்காரர்களால் அரச உதவியுடன் பலவந்தமாக வெளியேற்றப் பட்டிருந்தார்கள். ஓராண்டு காலமாக அந்த நிலத்தின் மீதான உரிமைக்காக மேற்படி கிராம விவசாயிகள் பல்வேறு வழிகளிலும் தொடர்ந்து போராடி வந்துள்ளார்கள். ஆயினும் மேற்படி நிலவுடமையாளர்

2ம் பக்கம் பார்க்க.

செய்தி வெளியீட்டுப்பிரிவு, தமிழீழ தேசியவிடுதலை முன்னணி N.L.F.T.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிலவுடமையாளரின் வாக்குமூலம்

'ஓ இப்ப உங்களுக்கு 25 ரூபா காணுதுதான். எல்லாரும் கேக்க வெளிக்கிட்டிட்டியள். எங்கட பொடியள் தமிழீழம் (சோசலிச தமிழீழம்?) எடுக்கட்டன் உங்களுக்கு ஐந்துரூபா இல்லாட்டி அந்தக் காலம் மாதிரி 1 கொத்து அரிசியும் 1 தேங்காயோடையும் அனுப்புறமா இல்லையா எண்டு பாருங்கடா''

இது வயலில் கூலித்தொழிலாளராக அறுவடைக்கு சென்றவர்கள் தமது கூலியை 30 ரூபாவாக தாருங்களன் என்று கேட்டதற்கு கரவெட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த நிலவுடமையாளர் ஒருவரின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் கூறப்பட்ட பதிலாகும்.

தமிழீழ பிரதேசத்தின் பிரதான உற்பத்தியில் ஒன்றான விவசாயமானது, அதிகமாக உற்பத்தி நிலங்கள் ஒருசிலரின் கைகளில் குவிந்தவண்ணமும், ஏற்கனவே பெருமளவு நிலங்கள் (10–150 ஏக்கர்வரை) உடமையாகக் கொண்ட நிலையிலுமே பெரும்பாலும் நடைபெற்று வருகின்றது. இதனால் இந் நிலங்களை நோக்கி:

1. சொந்த நிலமற்ற அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு உழைப்புச் சக்தியைத் தவிரவேறு எதுவுமற்றவர்கள் (அநேகமாக வயற் காணிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் – பண்ணை அடிமைகளாக).
2. சொந்தமாக நிலமிருந்தும் (அதிகமாக அகதிகளாக வந்தபோது வளங்கப்பட்ட காணிகள் ½—3 ஏக்கர்) உற்பத்தியில் ஈடுபட முடியாதார்களாய் (மூதலின்மை) உழைப்பு சக்தியை விற்பதன் மூலமே வாழ்க்கையைக் கொண்டு நடாத்துபவர்களும்
3. சொந்தநிலத்தில் சிறிதளவு உற்பத்தியில் ஈடுபடுவதுடன் கூலிஉழைப்பிற்கு செல்லவேண்டிய நிலையில் உள்ள ஏழைவிவசாயிகளும்.

விவசாயக் கூலிகளாகச் செல்கின்றனர்.

இவ்வாறான விவசாய கூலித் தொழிலாளரது வாழ்க்கையானது மிகவும் கஸ்டம் நிறைந்ததாகவே உள்ளது தொடர்ந்து கூலிவேலை இல்லாதநிலையிலும், வாங்கப்படும் கூலியும் (ஆண்கள் 25 – 35 ரூபாவாக, பெண்கள் 15 – 25ரூபாவாக) குடும்பமானது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாததாகவே உள்ளது. அநேகமான பொழுதுகள் உணவின்றியே செல்கின்றது.

இந்த உழைக்கும் மக்களது இன்றைய கஸ்டம் நிறைந்த வாழ்வில் இருந்து விடுபடல்என்பது தமிழீழ விடுதலையுடன் இணைந்துள்ளதா? இவர்கட்கு இதுவொன்றும் விதியோ அல்லது கூலிஉழைப்பிற்கென்றே படைக்கப்பட்டவர்களோ அல்ல இவர்களது வாழ்விலிருந்து விடுதலை வேண்டும் என உணரப்படுகின்றதா? இல்லை ''சோசலிச தமிழீழம்'' பற்றி எங்கும் உரக்க ஒலிக்கின்றது. ஆனால் இந்தமக்கள் தமது விடுதலைக்காக தமது அன்றாட வாழ்வில் எதிர்படும் கஸ்டங்களிற்காக போராட முற்படும்போதோ அல்லது அந்த நோக்கில் செயற்படும் போதோ இந்த முற்போக்கு திரை அணிந்த சோசலிசவாதிகளோ இவையெல்லாம் பின்னர் பார்க்கலாம், இது எம்மைப் பிளவுபடுத்திவிடும்

10ம் பக்கம் பார்க்க.

---

## ஸ்ரீலங்கா அரசின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைவெறிக் கரங்களால் இறப்பதை வெறுத்து, அவர்கள் நீதிக்காக போராடி உயிரினை இழக்க உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

வெலிக்கடை சிறையில் போராட்டத்தை தொடரும் இவ்வுண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக தமிழீழம் எங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள், மறியல் போராட்டங்கள் பல்வேறு விடுதலை இயங்கங்களாலும், வெகுஜனங்களாலும் நடாத்தப் படுகின்றன. யாழ் பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக கட்டம் கட்டமாக உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கிறது.

ஸ்ரீலங்காவின் பாசிச யூ. என் பி அரசானது, ஏகாதிபத்திய நலன்களை பேணும் விதத்தில் பரந்துபட்ட மக்களை ஒடுக்கிவருகிறது. உள்நாட்டு ஆளும் வர்க்கங்களான தாகு முதலாளிய நிலப்பிரபுத்துவ பிற்போக்காளர்களின் சுரண்டல் லாபங்களை முன்னிட்டு தமிழீழம் மீதான ஒடுக்குமுறையானது விசேட பரிமாணங்களுடன் வெளிப்படுகிறது. தமிழீழத்தை விடுவிப்பதற்கான போராட்டமானது இங்கு ஒடுக்கப்பட்டு வருகின்ற அனைத்து மக்களதும் விடுதலைக்கும், சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்கும் வழிகோலும் விதத்தில் ஆழப்படுத்துவது அவசியமாகும். பரந்துபட்ட தொழிலாள விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினரை ஐக்கியப்படுத்திய புரட்சிகர மக்கள் யுத்தப் பாதை ஒன்றே, தேசிய ஒடுக்குமுறையிலிருந்து மக்களை விடுவிக்கும் ஒரே வழிமுறையாகும்.

தமிழீழத்தின் புதிய சனநாயகப் புரட்சியை நோக்கமாகக் கொண்டு தொழிலாள விவசாயிகள் தலைமையிலான பரந்துபட்ட மக்களின் யுத்தத்தில் அணிதிரள்வதே அனைத்து பாசிச வழிமுறைகளையும் கையாளும் இப் பிற்போக்கு இனவெறி அரசை நிர்மூலமாக்கும் ஒரே வழியாகும்!

விடுதலைப் போராளிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்து, அரசின் ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்துமாறு அனைத்து முற்போக்கு சனநாயக சக்திகளையும் அறைகூவி அழைக்கிறோம்!

பாசிச அரசின் ஒடுக்குமுறைகளை தகர்த்தெறிய தமிழீழத்தில் புதிய சனநாயகப் புரட்சியை நிறுவ, தொழிலாள விவசாயிகள் தலைமையிலான புரட்சிகர மக்கள் யுத்தப் பாதையில் அணிதிரளுமாறு பரந்துபட்ட மக்களை அறைகூவி அழைக்கிறோம்!

ஸ்ரீலங்கா இனவெறி அரசே!

- ★ சிறைச்சாலை சித்திரவதைகளை நிறுத்து!
- ★ பெண் கைதிகளை பாலியல் வதைகளுக்குள்ளாக்காதே!
- ★ உண்ணாவிரதப் போராளிகளை உடன் விடுதலை செய்!

---

## புத்தூர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனது நிலத்தை இவர்களுக்கு விட்டுக் கொடுக்கவோ அன்றி அவர்கள்

10ம் பக்கம் பார்க்க

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## திம்பு பேச்சுவார்த்தை

# ஸ்ரீலங்கா அரசின் இன்னுமொரு திசைதிருப்பல் நாடகமே!

தமிழீழம் கடந்த நாற்பதாண்டு காலத்தில் பல்வேறு பேச்சுவார்த்தைகளை கண்டு கழித்துவிட்டது. கூர்மையடைந்துள்ள தமிழீழதேசிய விடுதலைப் போராட்டம் உள்நாட்டிலும் சர்வதேசிய ரீதியிலும் ஏற்படுத்திவரும் நெருக்கடிகளை சமாளிக்க முடியாத இலங்கை அரசு பல்வேறு பேச்சுவார்த்தைகளை நடாத்தி வந்துள்ளது. தமிழீழ மக்கள்மீதான ஒடுக்குமுறைகளை சற்றேனும் நிறுத்திவிடாமலே, பேச்சுவார்த்தை நாடகம்மூலம், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பிவிட பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது இலங்கை அரசு.

இனப்பிரச்சினைக்கு புதிய தீர்வுகள், புதிய திட்டங்கள் என்றெல்லாம் 'புதுப்புது' யோசனைகளை தெரிவித்து, இனப்பிரச்சனையை தீர்ப்பதில் அக்கறையுடன் செயல்படுவதாக தன்னைக் காட்டிக் கொள்ள இந்த யூ.எ.ன் பி அரசு எடுத்துவரும் ஒருநாடகமே தற்போது நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் 'திம்பு பேச்சுவார்த்தை'யும் ஆகும்.

ஒருபுறத்தில் யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே மறுபுறத்தில் காரைநகர், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை எங்கும் மக்கள் காட்டுமிராண்டித் தனமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். நள்ளிரவில் வீடுகளில் புகுந்து உறங்கிக் கொண்டிருந்த அப்பாவிமக்களை இழுத்துப்போட்டு நாயைச் சுடுவதுபோல சுட்டுக் கொன்றுவிட்டு, பயங்கரவாதிகளின் செயல் என்று பிரச்சாரம் செய்து தன்னை 'சுத்தமானவனாகக்' காட்டமுயன்று வருகிறது இந்த அரசு.

உண்மையில் இந்த கொலைகார, இனவெறி பிடித்த அரசின் பேச்சுவார்த்தையின் பின்னணியில் எந்தவித நல்ல நோக்கங்களும் கிடையாது. ஏகாதிபத்தியங்களதும், உள்நாட்டு பிற்போக்கு சுரண்டலாளர்களான தரகுமுதலாளிய நிரப்பிரபுத்துவ சக்திகளினதும் நலன்களை பர்துகாக்கும் இந்த அரசு, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க முடியாமல் (இவ்வாண்டு வரவுசெலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகை 3200 கோடி ரூபா) மேலும்மேலும் ஏகாதிபத்தியங்களை சார்ந்துநின்று அவர்களுக்கு விசுவாசமாகவே நடந்துகொள்கிறது. ஏகாதிபத்தியங்களின் பிடிகளிலிருந்து துண்டித்துக் கொள்ளாமல் தேசிய விடுதலை என்பதோ, பரந்துபட்ட மக்களின் சனநாயகவாழ்வோ ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. இந்த ஏகாதிபத்திய சார்பு அரசுகீழ் எத்தனை ஆயிரம் பேச்சுவார்த்தைகள் நடாத்தினும் கூட, மக்களின் சனநாயகவாழ்வு ஒருபோதும் அமைய முடியாது. திம்பு பேச்சுவார்த்தையில அரசு சமர்ப்பித்த ஏமாற்றுத் திட்டங்கள் அனைத்துமே, இருக்கும் நிலையைவிட ஓரளவேனும் அதிகளவு ஜனநாயக வாழ்வுக்கு வழிகோலப் போவதில்லை. ஆயினும், தமிழ் ஆளும் வர்க்கங்கள், சொற்பளவேனும் தங்கள் கையில் அதிகாரம் கிடைக்காதா என்ற எதிர்பார்ப்புடன் ஏதாவது ஒரு சமரசத் தீர்வுக்காக ஏங்கி வருகின்றன.

தமிழீழத்தின் தேசியவிடுதலை என்பது தமிழீழம் என்று ஒரு தனிநாட்டினை பிரிப்பதோடு முடிந்து விடுவதாக பலர் நினைக்கிறார்கள். வெற்று எல்லைப்பிரிப்பு விவகாரமாக இது அமைவதென்பது, தமிழ்த்தரகுமுதலாளிய நிலப்பிரபுத்துவ பிற்போக்காளர்களின் கைகளில், நாட்டை ஒப்படைப்பதாகும். அதாவது,

9ம் பக்கம் பார்க்க.

---

தேவாலயத்தில்

## சீனத் தொழிலாளர் கிளர்ச்சி!

அண்மைக் காலங்கள் சீனாவின் அரசாங்கம் சோசலிச நடைமுறைக்கு எதிராக உள்ளதை திட்டவட்டமாக இனங்காணக் கூடியதாக உள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கை என்று கூறிக்கொண்டு அந்நிய ஆதிக்கத்திற்கு வழங்கவும், தொழிலாளர் நிர்வகித்த தொழிற்சாலைகளை தனியார் கைகளுக்கு வழங்குவதையும் செய்துவருகிறது. திரும்பவும் முதலாளித்துவ புத்துணர்ச்சியை உத்வேகத்துடன் செயல்படுத்த இராணுவத்தில் ஆள்க் குறைப்பு (மா.ஓ.சேதுங்கின் கொள்கைப் பற்று உடையவர்களை நீக்குதல்). கத்தோலிக்க தேவாலயங்களை திரும்பவும் திறத்தல், இப்படிப்பல.

19-05-1985 அன்று சீனாவின் கிழக்குப்பகுதி நகரான வென்ஷோவில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றைத் தாக்கிய தொழிலாளர்கள், ஆராதனையிலீடுபட்டுக் கொண்டிருந்த 300க்கும் அதிகமானோரை எட்டு மணித்தியாலங்களாக தேவாலயத்திற்குள் தடுத்து வைத்திருந்தனர். பொலிசாரின் தலையீட்டினால் எட்டு மணித்தியாலங்களுக்குப் பின்னர் அவர்களை விடுவித்தனர்.

கைக்குட்டைத் தொழிற்சாலையிலிருந்து வந்த தொழிலாளர்கள் ஒலிபெருக்கிகளைப் பூட்டி தேவாலயத்துல் ஆராதனை நடத்திய கூட்டத்தினரைக் கைது செய்து அவர்களின் பிற்போக்குத்தனங்களை அம்பலப் படுத்தினர்.

தேவாலயக் கட்டிடத்தின் உரிமை தொடர்பாக எழுந்த சர்ச்சையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. மா.ஓ.சேதுங்கின் கலாச்சாரப் புரட்சிக் காலகட்டத்தின் போது மேற்படி தொழிற்

9ம் பக்கம் பார்க்க.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### அரச வதை முகாம்களில்

# விடுதலைப் போராளிகள் படுகொலை!

யூலை 83ல் நடைபெற்ற சிறைப்படு கொலைகளை அடுத்து, தமிழீழப் பகுதிகளில் 'பயங்கர வாதிகள், என்று கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குள்ளாக்கப் பட்ட பல தமிழ் இளைஞர்கள் விசாரணைகளின் போது கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். எந்தவித குற்றச் சாட்டுக்களும் இன்றி, பாசிச அவசர காலசட்டத்தின் கீழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும், காலவரை யின்றி தடுத்து வைக்கப்படுவதும், சித்திரவதைகளுக் குள்ளாக்கப் படுவதும் தமிழீழ அரசியல் வரலாற்றில் புதிய விசயங்கள் அல்ல. ஆனால், தற்போது அரசியல் கைதிகள் விசாரணைகளின்றி படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள்.

அண்மையில் தங்காலை சிறைச்சாலையில். விடுதலை செய் அல்லது விசாரணை செய் எனக்கோரி உண்ணாவிரதத்தை மேற்கொண்ட ஆறு இளைஞர்கள் சுட் டுக் கொல்லப்பட்டிருக் கிறார்கள். சிறைச்சாலையில் இருந்து தப்பி ஓடமுயன்றதாக குற்றம் சாட்டி அரசு இவர்களைச் சுட்டுத் தள்ளியுள்ளது. ஜேர்மனிய ஹிட்ல ரின் நாஜிப்படைகளுக் கொப்பான விதத்தில் இன அழித் தொழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், அவற்றை தனது பிரச்சார சாதனங்கள் மூலம் மறுப்பதும் இலங்கை அரசுக்கு தற்போது மிகச் சாதாரண விசய மாகி விட்டது.

வவுனியாவில் இரவோடு இரவாக. படுகொலை செய் யப்பட்ட உடல்கள் வீதியினின்றும் அகற்றப்படும் முன் னரே, வவுனியா வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் ஓடிய குருதி உறையுமுன்னரே, 'அப்படி எதுவும் நடக்க வில்லை' என்று பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டது இந்த அரசு.

தேசிய இனமாக தமிழினத்தை அங்கீகரித்தால், தமிழீழம் பிரிவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ப தற்காக அதைமறுக்கின்றதாக 'திம்புவில்' பேசுகின்ற இந்த அரசின் கேடுகெட்ட பாசிச நடவடிக்கைகள் உள் நாட்டிலும். சர்வதேச அரங்கிலும் அதன் சுயரூபத்தை அம்பலமாக்கி வருகின்றன. அந்நிய ஏகாதிபத்தியங்களை யும், அந்நியநிதி நிறுவனங்களையும் சார்ந்து நின்று நாட்டுமக்களை அவை கொள்ளையடிக்க வாய்ப்பு ஏற்ப டுத்திக் கொண்டிருக்கும் இந்தமக்கள் விரோத அரசின் நடவடிக்கைகள் மேலும் மேலும் அம்பலமாகிவருகின் றன.

வதைமுகாம்களில் விடுதலைப் போராளிகள் படு கொலை அரசின் பாசிச நடவடிக்கைகளின் ஒரு பகுதியே. நாடளாவிய எதிர்ப்பினை பெறும் விதத்தில அரசின் நட வடிக்கைகள் பெருகி வருகின்றனவாயினும், பரந்து பட்டமக்களை அணிதிரட்டவும், இத்தகைய பாசிச நட வடிக்கைகளுக்கு எதிரான போர்க்குரலை அவர்கள் எழுப் பவும் தக்கவிதத்தில் புரட்சிகர அரசியல் வேலையானது மக்கள் மத்தியில் இன்னும் செய்யப்படாமலே உள்ளது. சிறைச்சாலைப் படுகொலைகளையும், மற்றும் அரசின் மக் கள் விரோத பாசிச நடைமுறைகளை எதிர்த்தும் எதிர்ப் புக்குரலை எழுப்பி அரசை நிர்ப்பந்திக்குமாறு அனைத்து சனநாயக முற்போக்கு சக்திகளையும் அறைகூவி அழைக் கிறோம்.

இப் பாசிச அரசமைப்பினை தகர்த்தெறிந்து மக் கள் சனநாயக அரசமைப்பை நிறுவ,

தமிழீழ புதிய சனநாயகப் புரட்சிப்போரில் அணி திரளுமாறு பரந்துபட்ட தமிழீழ மக்களை அறைகூவி அழைக்கிறோம்.

---

### ஏழை என்ன கிள்ளுக்கீரையா?

## விசுவமடுவில் கூலித் தொழிலாளரின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

''விசுவமடுப் பகுதியில் தொழிலாளி ஒருவர் தாக் கப் பட்டதையடுத்து அப்பகுதியை சேர்ந்த விவசாயக் கூலித்தொழிலாளர் சுமார் 250 பேர் எதிர்ப்பு ஊர்வ லத்தை நடாத்தினர். ஊர்வலத்தின்போது ''பரமசிவம் முதலாளியை ஒழிப்போம். முதலாளிவர்க்கம் ஒழிக பாட்டாளிவர்க்கம் வாழ்க, மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும் மக்களே நாம் கேட்டோம் ஏழை என்ன கிள்ளு கீரையா'' என்று கோசித்தவண்ணம் சென்றனர். மக்க ளின் ஒன்றுபட்ட எழுச்சியைக் கண்டு அஞ்சி இயக்க மொன்றின் பாதுகாப்புடன் தலைமறைவாகிவிட்டான்.

14-07-85 அன்று பேக்கரி, பலசரக்குக்கடை ஆகி யவற்றின் சொந்தக்காரனான பரமசிவம் என்பவனால் ஆணி அறைந்த பலகைகளாலும் பொல்லுகளாலும் மிகவும் படுமோசமாக அவனிடம் வேலைசெய்த தொழி லாளி தாக்கப்பட்டுள்ளார். இவர் அவனால் தாக்கப்பட் டோரில் 15 வது நபராவர். இதனால் கொதிப்புற்ற மக் கள் அன்றிரவே தடிகள் பொல்லுகளுடன் அவனை இழுத்துவரச் சென்றனர். அவனோ இயக்கமொன்றை பாதுகாப்புக்கு அழைத்து வைத்துக்கொண்டு அவர்கள் மூலம் தொழிலாளரை தடுத்து நிறுத்த முற்பட்டான் அவன் செய்தபிழைக்காக இயக்கம் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளது. இதனையெல்லாம் தாம் ஏற் றுக்கொள்ள தயாரில்லை எனவும் அவனை விசாரிக்க வேண்டுமெனவும் தொழிலாளர் உறுதியாக நின்றுள்ள னர். இறுதியில் இயக்கத்தினர் தாம் அங்குள்ள கிராமி யக் குழுவிடம் பிரச்சனையை குடுக்கின்றதாகவும் அவர் கள் விசாரிப்பர் எனவும் கூறியுள்ளனர்.

மறுநாளான 15ம் திகதியே தொழிலாளர் ஒன்றி ணைந்து இவ ஊர்வலத்தை நடாத்தியுள்ளனர். ஊர்வ லம் ஆரம்பிப்பதற்கு முன்னா கூடி தொழிலாளரது மோசமான வாழ்வை விளக்கும் புரட்சியிப் பாடல்க ளைப் பாடியுள்ளதுடன் அங்குள்ள அதிகாரி வர்க்க அமைப்பான கிராமிய குழுவிடம் தமது கோரிக்கைகளை

9ம் பக்கம் பார்க்க.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# ஐக்கியமுன்னணியும், கழகமும், நாமும்!

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பல்வேறு இயக்கங்களிடையேயும் ஐக்கியம், ஒன்றிணைப்பு தேவை என்ற குரல்கள் கடந்த ஓராண்டு காலமாக ஒலித்துவருகின்றன, நாம் எமது ஆரம்பகாலத்திலிருந்தே இத்தகைய ஒரு நோக்கத்திற்காக செயல்பட்டு வந்துள்ளோம். இதற்காக பல்வேறு அமைப்புகளுடனும் பேச்சு வார்த்தைகளையும் நடத்தியுள்ளோம்.

இன்னும் சரியாகச் சொன்னால், எமது பேச்சு வார்த்தைகளின் பின்னர்தான் அதாவது நாம் ஒன்றிணைவுக்காக இயக்கங் களுடனான பேச்சு வார்த்தைகளை தொடங்கிய பின்னர்தான் ஈழதேசிய விடுதலை முன்னணி (ENLF) கூட உருவாயிற்று. ஆயினும் எமது பேச்சுக்களின் மூலம் ஐக்கியப் படுவதற்கோ அல்லது குறைந்தபட்ச கூட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளோ ஏற்படவில்லை.

எம்மைப் பொறுத்த வரையில் நாம் எமது அமைப்பை ஒரு தேசிய விடுதலைக்கான பல்வேறு வர்க்கங்களின் ஐக்கிய முன்னனியாகவே கருதுகிறோம். ஆயினும் பல்வேறு ஸ்தானங்களாக உருவாகியிருக்கும் பல்வேறு ஐக்கிய முன்னணியை உருவாக்க வேண்டுமென்பது எமது அபிப்பிராயமாக இருந்தது.


- power politics involved in the region also be recognised by us. This, too, is comm accepted by all of the groups.

However we differ in the strategic approach t the problem. Presently we are holding unity talks with a number of like-minded organisations and we have already reached unity with two organisations - namely the Tamil Eelam Liberation Army and the National Liberation Front of Tamil Eelam.

Voice of Thamileelam Issue 24

மறுக்கிறோம்!

மறுக்கிறோம்!

நாங்கள் தமிழீழ விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் சக இயக்கங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகிறோம். ஆயினும் இதுவரை எந்த விடுதலை இயக்கத்துடனாவது எந்த வகையான கூட்டுக்கையும் நாம் அமைத்துக் கொள்ளவில்லை. நாம் இணைந்துள்ளதாக குறிப்பிட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளை மறுக்கிறோம்.

THE ISLAND Sunday 5th May 1985

தமிழீழ மக்களுக்கு

தேசிய விடுதலைப் போராட்டத்தை நாம் வெறும் தமிழீழத்தின் எல்லைப் பிரிப்பு விவகாரமாகப் பார்க்கவில்லை. தேசிய விடுதலைப் போராட்டம் என்பது அனைத்து அந்நிய ஆதிக்கங்களிலிருந்தும் (ஏகாதிபத்திய சுரண்டலில் இருந்து) உள்நாட்டு ஆளும் வர்க்கங்களிடமிருந்தும் தேசத்தை முழுமையாக மீட்டெடுக்கின்ற போராட்டமாகவே கருதுகிறோம். எனவே உண்மையில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஐக்கியப் படுகிற சக்திகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு, தரகுமுதலாளிய நிலப் பிரபுத்துவ எதிர்ப்புத்தன்மை கொண்ட நாட்டின் சுதந்திரம், இறைமை, இவற்றை மதிக்கின்ற தேசபக்த சக்திகளேயாகும். இத்தகைய சக்திகளிடையேயான ஐக்கிய முன்னணிக்காகவே நாம் முயன்று வந்துள்ளோம், முயன்று வருகிறோம்.

எமது ஐக்கியத்திற்கான பேச்சு வார்த்தைகளில் கூட நாம் தேசபக்த சக்திகளிடையேயான ஐக்கியம் என்ற அடிப்படையிலேயே எமது பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். இந்த வகையில் நாம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் (PLOT) நடாத்திய பேச்சு வார்த்தைகள் ஒரு குறைந்தபட்ச கூட்டுக்கான வாய்ப்புக்கூட இல்லாமல் முடிந்துபோயின.

ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் தொடர்ச்சியாக எமது ஸ்தாபனத்தை தம்முடன் இணைந்துவிட்டதாக பிரச்சாரம் செய்து வந்துள்ளது. இதை நாம் பலதடவைகள் மறுத்துள்ளபோதும், பேட்டிகளில் கழகச் செயலதிபர் எமது ஸ்தாபனம் தம்முடன் இருப்பதாகக் கூறி வந்துள்ளார்.

எமது அமைப்பு கழகத்துடன் இணைந்துவிட்டதாக செய்யப்பட்டு வரும் இந்தப் பிரச்சாரம் மிகவும் விசமத்தனமானது என கண்டனம் செய்கிறோம். இது எமது தோழர்களையும் ஆதரவாளர்களையும் மக்களையும் மிகவும் குழப்பத்திலாழ்த்தியுள்ளது.

ஐக்கியம் ஏற்படாமல் உள்ள போதே, சேர்ந்துவிட்டதாக திரும்பத்திரும்ப சாதிப்பது உண்மையான ஐக்கியம் உருவாவதை தடுக்குமே தவிர ஒரு போதும் இணைவை ஏற்படுத்தி விட முடியாது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியர் கருத்து–

# தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச்செல்ல தொழிலாள விவசாயிகள் தலைமையில் அணிதிரள்வோம்!

நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் இன்று ஒரு முக்கியமான கால கட்டத்திற்கு வந்துள்ளது. தமிழீழ விடுதலை என்ற நோக்கில் ஐக்கியப்பட்டுப் போராடிக் கொண்டிருந்த அனைத்து வர்க்கங்களுக்கிடையேயும் இன்று முரண்பாடுகள் கூர்மையாக வெளிப்படத் தொடங்கியுள்ளது. இயங்கிக் கொண்டிருக்கும் விடுதலை இயக்கங்களிடையேயும் தவிர்க்க முடியாது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இம்முரண்பாடுகள் பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இப்பிளவுகளின் பின்னணியில் நிற்கும் வர்க்க நலன்களை இனங்கண்டு கொள்ள தவறிவிடும்போது, உடைவுகளோ, உடைவுகளின் பின்னான செயற்பாடுகளோ பயனற்றுப் போய்விடுகின்றன.

ஓராண்டுக்கு முன்னர் தமிழீழ விடுதலை இயக்கத்தில் இருந்து பிரிந்தவர்கள் 'நியாயவிரும்பிகள்' என தம்மை அழைத்துக்கொண்டு செயற்பட்டார்கள். பின்னர் அவர்கள் எவ்வாறாயினர் என தெரியவில்லை. அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கியோ, திரும்பவும் தமிழீழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்தோ இருக்கலாம். ஆனால் இவர்கள் தாம் பிரிந்ததற்காக குறிப்பிட்ட காரணம், உட்கட்சி ஜனநாயகமின்மை, அராஜகப்போக்கு என்பவையே. தற்போது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து பிரிந்தவர்கள் 'தீப்பொறி' பத்திரிகையினூடாக தம்மை வெளிப்படுத்திக்கொண்டுள்ளார்கள். இவர்கள் வெளியிட்டுள்ள 'புதியதோர் உலகம்' நாவலில், தம்மை இவர்கள் மாக்சிஸ்டுகள் எனக் குறிப்பிட்டுள்ளபோதும், பத்திரிகை இதை தெளிவாக வெளிக்காட்டவில்லை.

பொதுவாக, ஜனநாயகத்தை அனுஸ்டிக்க வாய்ப்பின்றி வெளியேறியதே இவர்களின் அபிப்பிராயமாக இருந்துள்ளது.

ஆனால் இன்று தேசிய விடுதலைப் போராட்டம் எடுத்துள்ள புதிய பரிமாணம் சர்வதேச அரசியல் சூழ்நிலையோடு சம்பந்தப்பட்டதாகும். தேசிய விடுதலைப் போராட்டம் என்பது தமிழீழ தேசத்தை எல்லைகளாகப் பிரிப்பதல்ல. மாறாக வெளிநாட்டு உள்நாட்டு ஆளும் வர்க்கங்களின் பிடியிலிருந்து விடுபடுவதோடு சம்பந்தப் பட்டது ஆகும். இத்தகைய பிரக்ஞை அற்ற நிலையிலேயே மேற்படி வர்க்க முரண்பாடுகளின் தன்மையினை உணராது பல்வேறு வர்க்கங்களின் முரண்பட்ட போக்குகளே இதற்கான காரணம் என உணராது நடைபெறும் நிகழ்ச்சியே மேற்கூறிய இருபிரிவுகளும் எனலாம்.

இது ஏகாதிபத்தியங்களின் உலகம் இக் காலகட்டத்தில் ஏகாதிபத்திய நலன்களின் பாதிப்பிலிருந்து உலகின் எந்த ஒரு நாட்டினது அரசியலும் இருக்க முடியாது. அமெரிக்க ஏகாதிபத்தியமும், ருஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் தமது செல்வாக்கு மண்டலங்களை ஏற்படுத்திக் கொள்வதற்காக நடத்தி வரும் போட்டி ஒரு மூன்றாம் உலக யுத்தத்தினை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் காலகட்டம் இது.

சகல உலக விடுதலைப் போராட்டங் களிலும் சோவியத் திரிபுவாதத்தின் ஆட்சி மேலோங்கி உள்ளது. ஏற்கெனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைகளில் இருக்கும் இந்தநாடுகள் தமது விடுதலைக்காகப் போராடும் போதெல்லாம் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தன்னை அந்த நாடுகளின் நல்ல நண்பனாகக் காட்டிக்கொண்டு, தனது ஆதிக்கத்தை நயவஞ்சகமாக செயற்படுத்தி வருகிறது.

எமது விடுதலை இயக்கங்களையும், விடுதலைப் போராட்டங்களையும் சோவியத் திரிபுவாதம் தனது கைக்குள் போட்டுக்கொள்ள அனைத்து வாய்ப்பான முயற்சிகளையும் எடுத்துவருகிறது. தேசிய விடுதலை ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை கொண்டது என்னும்போது, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை மறப்போமானால், நாம் அமெரிக்கப் பிடியிலிருந்து சோவியத் பிடிக்குள் போய்விழவே நேரும். ஆனால், இதுபற்றிய உணர்வு மக்களிடம் அற்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழீழத்தின் ஆளும் வர்க்கங்களும், தேசியபூர்சுவா வர்க்கத்தின் வலதுசாரிப் பிரிவும் ஏகாதிபத்தியத்துடனான சமரசப் பாதைக்கு போராட்டத்தை இட்டுச் செல்லும் ஆபத்து நிறையவே உள்ளது.

இது, தேசத்தின் சுயச்சார்பை உடைத்து, இன்னொரு ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் தளமாக தமிழீழத்தை மாற்றிவிடும். இத்தகைய நிலைமை ஒன்றின் வளர்ச்சியே, நாம் முதல் குறிப்பிட்ட 'பிரிவு' க்கு காரணமாக அமையும். உண்மையில் தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு வர்க்கங்களும், தத்தமது நலன்களுக்கேற்ப விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்திக் கொள்ள நினைக்கும். தேசிய பூர்சுவா வர்க்கமும் பாட்டாளிவர்க்கமும் தத்தம் நோக்கில் இதைப்பயன்படுத்த முயல்கின்றன.

தேசியவிடுதலையை, தேசத்தின் சுயச்சார்பை, ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ தளைகளை உடைத்தெறிய விரும்பும் அனைத்து புரட்சிகர வர்க்கங்களும், பாட்டாளிவர்க்கத் தலைமையில் ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே இதனை சாதிக்கமுடியும். தேசிய விடுதலைப்போராட்டமானது, விவசாயமே பிரதான உற்பத்தியாகக் கொண்ட எமது நாட்டில், பரந்துபட்ட விவசாயிகளின் விவசாயப் புரட்சியை (நிலப்புரட்சியை) மையமாகக் கொண்டே அமையும். எனவே தொழிலாள விவசாயிக

7ம் பக்கம் பார்க்க.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செல்வபுரம் குடிசைகள் தீக்கிரை!

உரும்பிராயிலுள்ள செல்வபுரம் கிராமத்தில் கல்லுடைக்கும் கூலித்தொழிலாளர்களின் 16 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா இராணுவ அச்சுறுத்தலுக்கு அஞ்சி குடிசையை விட்டு அகதிகள் முகாமுக்கு இடம்மாறிய போது இந்த கொடூர நிகழ்ச்சி நடாத்தப்பட்டுள்ளது.

செல்வபுரம் கிராமத்தில் மேற்படி குடிசைகள் அமைக்கப்பட்ட பகுதி நீண்டகாலமாக தரிசாக கிடந்த முடிக்குரிய நிலமென்றும், அதனால் நிலமற்ற இவ்வறிய தொழிலாளர்கள் தாங்கள் குடியிருக்க குடிசைகள் அமைத்துக்கொண்டார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆயினும் இத்தொழிலாளர்கள் இங்கு குடியேறியதைப் பொறுக்காத சிலர், அந்நிலத்திற்கு சொந்தங் கொண்டாடவும், தொழிலாளர்களை அப்புறப்படுத்துவதில் ஆர்வம் காட்டினரென்றும் பேசப்படுகிறது.

21-05-85 அன்று, தொழிலாளர்கள் யாரும் வீட்டிலில்லாதபோது இக்குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. குடியிருக்க நிலமற்ற கூலித் தொழிலாளர்களின் குடிசைகட்கு தீயிட்ட சக்திகளையும், அவர்களுக்கு பின்னணியில் நின்றவர்களையும் இனங்கண்டு, அம்பலப்படுத்த வேண்டும். நிலவுடமையாளர்கட்கு கூலிப்படையாக நின்று செயல்படும் சக்திகள் யார் என்பதை மக்கள் இனங்காண வேண்டும்.

ஒடுக்கப்படுகின்ற தொழிலாள விவசாயிகள் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு, ஒடுக்குமுறையாளருக்கும் அனைத்துப் பிற்போக்காளருக்கும் மரண அடி கொடுக்க, தேசிய விடுதலைப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்க தயாராகுமாறு அறைகூவி அழைக்கிறோம்!

**திம்புபேச்சு ...**

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மாக சுரண்டுவதற்கான வாய்ப்பை வழங்குதலே ஆகும்.

இந்த யூ.என்.பி அரசினுடனான பேச்சுவார்த்தையில் ஏதாவது 'அதிகாரம்' கிடைக்குமாயினும், அது பரந்துபட்ட தமிழீழ மக்களுக்காக அல்லாது தமிழீழத்தின் சுரண்டும் வர்க்கங்களின் கொள்ளை நலன்களுக்கே சார்பாக அமையும் என்பது மிகவும் தெளிவானது.

தமிழீழத்தின் தேசிய விடுதலையானது, நாட்டின் சுதந்திரத்தையும் இறைமையையும் பாதுகாக்கவும், ஏகாதிபத்திய சுரண்டலிலிருந்து முற்றாக துண்டித்துக் கொள்ளவும், மக்கள் சனநாயக வாழ்வுக்கு வழியமைக்கவும் வேண்டுமானால் அது பேச்சு வார்த்தைகளால் கிடைக்கப் போவதில்லை. மாறாக பரந்துபட்ட மக்களின் ஆயுதமேந்திய போராட்டத்தினாலேயே சாதிக்கப்பட முடியும்.

தமிழீழத்தின் தேசிய சுதந்திரத்தையும், பரந்துபட்ட மக்களின் சனநாயக வாழ்வையும் நிறுவ, தமிழீழத்தை அனைத்து ஏகாதிபத்தியங்களினதும் சுரண்டலிலிருந்து விடுவித்தாக வேண்டும். பரந்துபட்ட தொழிலாள விவசாய பெருமக்களை சார்ந்து நின்று, தமிழீழத்தின் தேசிய விடுதலையை புதிய சனநாயகப் புரட்சியாக வென்றெடுக்க வேண்டும். புதிய சனநாயகப் புரட்சி மூலமே தேசிய விடுதலையும், தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்பும் உருவாகும். புதியசனநாயகப் புரட்சியும், மக்கள் சனநாயக சர்வாதிகார அரசுமே மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கும்.

எனவே எல்லாவகையான பேச்சுவார்த்தை ஏமாற்றுக்களையும் நிராகரிப்போம்! பரந்துபட்ட விவசாயப் பெருமக்களை சார்ந்து நின்று புரட்சிகர மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவோம்! மக்கள் சனநாயக குடியரசை வென்றெடுப்போம்.

**ஆசிரியர் ...**

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சிக்கான மக்கள் யுத்தப்பாதையில் பரந்துபட்ட மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போரிடுவதையே, தேசியவிடுதலைக்காக போராடும் சக்திகளின் வெற்றிக்குரிய ஒரே மார்க்கமாகும்.

தேசியபூர்சுவா வர்க்கம் தனது ஊசலாடும் தன்மை காரணமாக வலதுசாரி அணியாகவும், இடதுசாரி அணியாகவும் உடைகிறது. இவ் வலதுசாரி அணி தேசிய விடுதலையைக் கைவிட்டு ஏகாதியபத்திய சார்பு நிலையை எடுக்கக் கூடியது. இது விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலையும் செய்யத்தயங்காது. எனவே தேசியவிடுதலையில், ஒடுக்கப்படும் அனைத்து வர்க்கங்களும் புரட்சிகர பாட்டாளி வர்க்கத் தலைமையைச் சார்ந்து நிற்கவேண்டும்

அனைத்து விடுதலை இயக்கங்களும் தமது போக்கு திரிபுவாத பிற்போக்குத் தலைமையிடம் சிக்காதிருக்க வர்க்க முரண்பாடுகளால் ஏற்படும் இயக்கப் போக்கைப் புரிந்துகொண்டு பரந்துபட்ட தொழிலாள விவசாயிகளை தலைமையாக ஏற்றுக்கொண்டாக வேண்டும் அப்போதுதான் அனைத்து விடுதலை இயக்கங்களின் தலைமை பிற்போக்கு சக்திகளிடம் பறிபோவதைத்தடுக்க முடியும், பிளவுகளைத் தவிர்க்கவும்முடியும்

தேசியவிடுதலைப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுக்க தொழிலாள விவசாயிகள் தலைமையில் அணிதிரள்வோம்!

**திருத்தம்;** 5ம் பக்கத்தில், 'ஐக்கிய முன்னணியும், கழகமும், நாமும், என்ற கட்டுரையில், இரண்டாவது கொலத்தின் இரண்டாம் பந்தியிலுள்ள, 'ஆயினும் பல்வேறு ஸ்தாபனங்களாக உருவாகியிருக்கும் பல்வேறு ஐக்கியமுன்னணியை உருவாக்கவேண்டுமென்பது' என்றுள்ள பகுதியை 'ஆயினும் பல்வேறு ஸ்தாபனங்களாக உருவாகி இருக்கும் பல்வேறு ஐக்கியமுன்னணிகளிடையே (இயக்கங்களிடையே) கூட்டு ஏற்படுத்துவதன் மூலம் ஒரு பலமான ஐக்கியமுன்னணியை உருவாக்கவேண்டுமென்பது' என திருத்தி வாசிக்கவும். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விளையும் பயிரும்

# நச்சுத் 'தளிரும்'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து மறுமலர்ச்சிக்கழகம் வெளியிடும் 'தளிர்' சஞ்சிகையின் சித்திரை 1985 இதழில் எமது பெயரில் ஒரு கட்டுரையை வெளியிட்டு இருந்தது. உடனடியாகவே நாம் 'தளிர்' குழுவினருடன் உத்தியோக பூர்வமாக தொடர்பு கொண்டு அக்கட்டுரைக்கும் எமக்கும் தொடர்பில்லை எனவும், இப்படியான செயல் எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, என்றும் உடனடியாக இதற்கு மறுப்புத் தெரிவிக்கவேண்டுமெனவும் கேட்டிருந்தோம். இக்கடிதத்தின் பின்னரே உத்தியோக பூர்வமான முறையில்முதல்தடவையாக கடிதமொன்றை அனுப்பியிருந்தது. அதில், தாங்கள் உத்தியோகபூர்வமான முறையிலேயே X என்பவரிடம்'கட்டுரையொன்றைக் கேட்டிருந்ததாகவும் அவரே அக்கட்டுரையை வெளியிடும்படி தம்மிடம் ஒப்படைத்ததாகவும், குறிப்பிட்டிருந்தார்கள். எனவே மறுப்பு வெளியிடத் தேவையில்லை எனத் தாம் கருதுவதாகவும் உறுதியாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

'தளிர்' குழுவினர் குறிப்பிட்டிருந்த 'X' என்ற 'நபர்' 'எமது இயக்கத்தின் பெயரில்' தளிரில் வெளிவந்த கட்டுரைக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் அதற்கு தானும் தளிர் ஆசிரியர் குழுவினருமே பொறுப்பாளிகளாக உள்ளோம்' எனவும் குறிப்பிட்டு எம்மிடம் கடிதம் தந்துள்ளார்; நீங்கள் விரும்பினுல் அக்கடிதத்தைப் பார்வையிடலாம் எனக் குறிப்பிட்டிருந்தோம். 'மறுப்பு வெளியிட வேண்டிய அவசியம் இல்லை' என 'தளிர்' உறுதியாக குறிப்பிட்டிருந்தபடியால் அக்கடிதத்தை தளிரின் பார்வைக்கு கொடுப்பதில் நாம் அக்கறை காட்டவில்லை.

இலக்கு – 6ல் வெளிவந்த எமது மறுப்பைப் பார்த்துவிட்டு நாம் நேர்மையீனமாக நடந்துள்ளோம் என தளிர் குழுவினர் மிகுந்த வேதனையுற்று 'தளிர் ஆனி – ஆடி' 85 இதழில் விளையும் பயிரை முளையில் தெரியுமென ஒரு குறிப்பை எழுதியுள்ளார்கள். அதில் தமது 'அறிவுக்கெட்டிய விதத்தில்' சில கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். இரண்டு கண்டுபிடிப்புகளை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

(1) 'X" என்பவர் NLFT உறுப்பினர்.

(2) 'மேற்படி கட்டுரை, NLFT ஐச்'சார்ந்த ஒருவனின் தனிப்பட்ட கருத்து என்பதில் எமக்கு சந்தேகமில்லை. இது ஸ்தாபனத்தின் கருத்தல்ல. என்று NLFT அறிவித்திருந்தது.

● NLFTன் உறுப்பினர் தகுதியை வழங்கும் உரிமை அதன் மத்திய குழுவிற்கு மட்டுமே உண்டு அது அவ் உரிமையை NLFT தளிர் குழுவினரிடம் இன்னமும் கையளிக்கவில்லை. 'X' ஒரு NLFT உறுப்பினரா இல்லையா என தளிர் எவ்வாறு தீர்மானித்ததோ நாமறியோம்!

● 'மேற்படி கட்டுரை NLFT யைச் சார்ந்த ஒருவனின் தனிப்பட்ட கருத்து என்பதில் எமக்கு சந்தேகமில்லை. இது ஸ்தாபனத்தின கருத்தல்ல என நாம் ஒருபோதும் குறிப்பிடவில்லை. எம்நேர்மையை சந்தேகிப்பதாக கூறிக்கொண்டு நாம் குறிப்பிடாதவற்றையே குறிப்பிடும் தளிரின் நேர்மையயீட்டு என்ன சொல்ல?

தளிர் ஆசிரியர் குழுவுக்கு ஒன்று சொல்லலாம்–

நீங்களே உங்கள் முகத்தை கண்ணுடியில் பார்த்துக்கொள்ளுங்கள். அப்போது உங்களுக்கே தெரியும் நேர்மையாளர்கள் யாரென்று.

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது உண்மைதான்!

தளிர் துளிர்விடும்போதே கண்டுகொண்டோம்–
அது ஒரு நச்சுத் தளிர்தான் என்பதை.

# தொடர் மாடியில் தொடரும், சாதீய ஒடுக்குமுறைகள்.

ஒரு வருடங்களுக்கு முன் குருநகரில் கட்டப்பட்டிருந்த ஐந்துமாடித் தொடர் வீட்டுக் கட்டிடத்தில் குடியேறிய ஸ்ரீலங்கா பாசிச அரசின் கூலிப்பட்டாளமானது அண்மையில் முகாமைவிட்டு வெளியேறியதும், வீடுகள் பொதுமக்களின் பாவனைக்காக விடப்பட்டதும் யாபேரும் அறிந்ததே.

இவ் வீடுகளானது வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சினுல் குருநகர் வாழ்மக்களின் இட நெருக்கடியை தீர்த்துவைக்கும் முகமாகக் கட்டப்பட்டதாகும். ஆறு தொடர்மாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் 160 வீடுகளைக் கொண்டதாகும் இவ்வீடுகளானது உண்மையில் குடிசையில் வாழ்ந்துகொண்டிருக்கும் இடநெருக்கடிக்குள்ளாகி இருக்கும் மீனவகுடும்பங்களுக்கும் இடதுப்பரவுத்தொழில், கட்டிடவேலை, தச்சுத்தொழில் என்பவற்றை மேற்கொள்ளும் கூலித் தொழிலாளருக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனுல் இவ்வீடுகளானது ஏற்கனவே குடியிருப்பு வசதிகளைக் கொண்டோர்க்கும், படகுச் சொந்தக்காரர்களுக்கும், சடத்தல் பேர்வழிகளுக்குமே அநேகமாகப் பகிரப்பட்டுள்ளது. இதனுல் வெறுப்படைந்திருக்கும் மக்களின் மன உணர்வுகளைத் திசைதிருப்பி

11ம் பக்கம் பார்க்க.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூட்டணி எம்பிக்கள் படுகொலை:

# ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. V தர்மலிங்கம், திரு, M. ஆலாலசுந்தரம் ஆகியோர் இனம் தெரியாத 'நபர்களால்' படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். மானமுள்ள தமிழர்கள் என தம்மை வெளிப்படுத்திய கொலையாளிகள் தமது மானம் கப்பலேறிவிடும் என்றோ என்னவோ தம்மையும் தமது கொலைக்கான காரணத்தையும் தெளிவாக இனம் காட்டவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிற்போக்குத் தலைமையானது கடந்த காலங்களில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்து துரோகம் இழைத்து வந்துள்ளது. ஸ்ரீலங்கா இனவெறி அரசுடன் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதன் மூலம் தமிழ் பெருமுதலாளி வர்க்கத்தினரின் நலன்களை உயர்த்திப்பிடித்தனர். பரந்துபட்ட தமிழ்பேசும் மக்களின் போராட்ட எழுச்சியைப் பயன்படுத்தி (ஏகாதிபத்தியங்களை சார்ந்து நின்று) தமிழ் ஆளும் வர்க்கத்தினரின் சுரண்டலுக்கு வாய்ப்பாக ஓரளவாவது அதிகாரத்தை பெற்றுக்கொள்ள சிங்கள ஆளும் வர்க்கத்துடன் பேரம் பேசினர். தமிழீழ மக்களின் மீதான ஒடுக்குமுறைத் தளைகளை உடைத்தெறிவதற்காக எக்காலத்திலும் இவர்கள் போராடியதோ (போராட்டத் திற்கர்க அணி திரட்டியதோ கிடையாது. மாறாக மக்கள் போராடக் கிளர்ந்த போதெல்லாம் இவர்கள் சந்தர்ப்பவாதிகளாகி போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தனர்.

ஆயினும் இப் பிற்போக்குத் தலைமைகளை மக்கள் முன் அம்பலப்படுத்துவதையும், இவர்களை தனிமைப் படுத்துவதையும் விடுத்து தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளை கையாள்வது மிகவும் மோசமான நடவடிக்கையாகும். தனிநபர் பயங்கரவாதம் காட்டுமிராண்டித்தனமாகும். வரலாற்றில் இது ஒருபோதும் வெற்றிபெற்றதில்லை. மாறாக எதிரிகளுக்கு சாதகமாகவே அமைந்துள்ளது.

கூட்டணி எம். பிக்களை படுகொலை செய்தவர்கள் யாராக இருந்தாலும் தம்மை பகிரங்கமாக இனங்காட்டிக் கொள்ளவேண்டும். அத்தகைய குறைந்தபட்ச துணிச்சல்கூட இல்லாதவர்களின் இந்தச் செயலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

புரட்சி மார்க்கம் தவிர்ந்த அனைத்து வழிகளும் ஏதோ ஒருவழியில் போராட்டத்தை திசை திருப்பவே செய்யும்.

---

**தேவாலயத்தில்...**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையால் பொறுப்பேற்கப்பட்ட தேவாலயத்தை மீண்டும் கையளிக்கும்படி உள்ளூர் அதிகாரிகள் (பிற்போக்குவாத அரசகைக்கூலிகளால்) நிர்ப்பந்திக்கப்பட்டனர். பின்னர் அத்தேவாலயத்தை வழிபாடு எனக்கூறி பிற்போக்கு (முதலாளித்துவ மீட்சிக்கு) நடவடிக்கைக்கு இட்டுச் சென்றனர்.

அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவ சீனாவை மா.ஓ.சேதுங் புதிய ஜனநாயகப் புரட்சியினூடாக சோசலிச பாதைக்கு இட்டுவந்தார். ஆனால் பிற்போக்குவாதிகள் மா.ஓ.வின் மறைவுக்குப் பின்னர் சீனாவை மீண்டும் முதலாளித்துவ மீட்சிக்கு கொண்டுவந்துள்ளனர். இதன் பாதிப்பை, தாம் இரத்தம்சிந்திப் பெற்றெடுத்த புரட்சிக்கு எதிரான இதன்போக்கை தொழிலாளர்கள் இனங்கண்டு, அதற்கெதிராக கிளர்ந்தெழத் தொடங்கியுள்ளனர்.

வர்க்க உணர்வு பெற்ற தொழிலாள வர்க்கம் எதிர்ப்புரட்சியுடன் சமரசம் செய்வதில்லை.

---

**திம்புபேச்சு...**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் அந்நிய ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எமது நாட்டில் வாய்ப்பினை ஏற்படுத்தி, தமிழீழத்தின் பரந்துபட்ட மக்களுக்கு விரோதமான ஆட்சியொன்றை இங்கு நிறுவுவதாகும். இது உண்மையில் தேசத்தின் விடுதலை அல்ல, மாறாக. தமிழ் சிங்கள ஆளும் வர்க்கங்களின் போட்டியில், தமிழ் ஆளும் வர்க்கங்களுக்கு சுதந்திர

7ம் பக்கம் பார்க்க.

---

**ஏழை என்ன ....**

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கையளிப்பதெனவும் கிராமியக்குழு நடவடிக்கை எடுக்கத் தவறின் மக்கள் பின்னர் விசாரிப்பதெனவும் முடிவெடுத்துள்ளனர். இதன்படியே மகஜரில்,

1. பாதிக்கப்பட்ட தொழிலாளியின் குடும்பத்திற்கு 20,000/= வாங்கவேண்டும்.
2. மக்கள் முன்னிலையில் பாதிக்கப் பட்டவர்கள் அனைவரும் அவனுக்கு சவுக்கடி கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஊர்வலத்தின் போது கையளித்து சென்றுள்ளனர்.

உடமைவர்க்கங்களின் பாதுகாவலர்களாக செயற்பட்டுவரும் விடுதலை வீரர்களை இனங்கண்ட ஏழைகள் ''ஏழைமக்களை விடுதலையை நாங்கள் வென்று எடுப்போம் இனியும் நாங்கள் ஏமாறமாட்டோம்'' என்று முழங்கி பதிலடி கொடுத்துள்ளதுடன், கஸ்டப்படும் மக்கள் தமது வறுமையிலும், தம்மீதான அடக்குமுறையிலும் இருந்து விடுபட தாம் ஒன்றுபட்டுப் போராடுவதைத் தவிர மாற்றுவழியில்லை என்பதை உரணத்தொடங்கியுள்ளனர்.

இவர்கள்முன்னால் ''சொல்லில் புரட்சி செய்யும் சோசலிச முகமூடிகள் கிழித்தெறியப்படுகின்றன,,

உழைக்கும் மக்களின் சிறுசிறு போராட்டங்கள் தமிழீழ புதிய சனநாயகப் புரட்சியை நோக்கி வளர்ந்தோங்கட்டும். வெல்க மக்கள் போராட்டம்!

வெல்க புதிய ஜனநாயகப் புரட்சி!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனித வதையில் உலக சாதனை!

# ஒரு மாதத்தில் 137 படுகொலைகள்!

ஈழநாடு பத்திரிகை செய்தியின்படி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் அரச கூலிப்படைகளால் கொல்லப்பட்டவர்களின் தொகை 137. பத்திரிகை செய்திக்கு மேலாக நூற்றுக்கணக்கானோர் திருமலை, வவுனியா திருக்கோவில் பகுதிகளில் கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா இனவெறி இராணுவத்தின் காட்டுமிராண்டித் தனமான படுகொலைகள் அனைத்தும் பயங்கரவாதிகளால் செய்யப்பட்டவை அல்லது கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் எனப் பிரச்சாரிக்கப் பட்டுவருகிறது.

மனிதவதையில் உலகசாதனை நிலைநாட்டுவதில் வேகத்துடன் முன்னேறிக்கொண்டிருக்கிறது ஸ்ரீலங்கா இனவெறி அரசு!

---

நிலவுடமை...

2ம் பக்கத் தொடர்ச்சி

என்று கூறிக் கொள்கின்றனர். புரட்சிகர சொற்களை உதிர்த்துக் கொண்டு (சோசலிசம், பாட்டாளி வர்க்க விடுதலை) ஆனல் அந்த உழைக்கும் மக்களை அணிதிரட்டாது, அந்தமக்கள் தம்து கையில் அரசை எடுக்கும் நோக்கில் அவர்களை போராட்டத்திற்கு தயார்படுத்தாது இவைபற்றிய அக்கறையேயற்று இதற்கு எதிரான போக்குகளே வளர்ந்து வருகின்றது. இந்த போக்குமீது கொண்ட நம்பிக்கையும், தமதுவர்க்க விடுதலைக்கான இயக்கங்களை வளர்த்து வருவதன் வெளிப்பாடே நிலவுடமையாளரின் வாக்குமூலம்.

உழைக்கும் மக்களின் விடுதலைக்கான நோக்கில் த. தே. வி போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியாக பாட்டாளிவர்க்கம், தொழிலாளர், கூலிவிவசாயிகள் தலைமையில் முன்னெடுக்க வேண்டும். அது பாட்டாளி வர்க்க விடுதலையான சோசலிசத்தை நோக்கி முன்னேற வேண்டும். இந்தநோக்கை பாட்டாளிமக்களின் புரட்சிப் பேரலையை தடுத்து நிறுத்தி விடலாம் என்ற பிற்போக்காளர்களின் தற்காலிக நம்பிக்கைகள் யாவும் உடைந்து சுக்குநூறாகும் காலம் வெகு தொலைவிலில்லை. பாட்டாளி வர்க்கம் தன்னை அடக்கிய வர்க்கத்தின் மீது சர்வாதிகாரத்தையும் பிரயோகிக்கும் அரசியற்போக்கே அந்த பக்களிற்கு விடுதலையை உறுதிப்படுத்தும்.

விவசாய கூலி உழைப்பாளர்களே!

உங்கள் உழைப்பால் உயர்ந்தவர்கள் தங்கள் கரங்களில், மீண்டும் கசக்கி பிழிவதற்கு ஆட்சியை மீட்பிக்க (சிங்கள தரகுமுதலாளிய அரசியற்குப் பதில் தமிழ் தரகுமுதலாளிய அரசு) முனைகின்றனர்.

எமது விடுதலையை நாம் தான் போராடிப் பெற வேண்டும். எமக்காக யாரிடமும் கேட்டுப் பெற முடியாது என்பதை நீண்ட நாட்கள் உணர்த்தியுள்ளனவே. சாதாரணமாக கூலி உயர்வுக்காக போராட முடியாத நிலையுள்ளபோது எப்படி எமது கையில் ஆட்சி கிடைக்கப்போகின்றது.

- கூலி உயர்வுக்கான போராட்டத்தை முன்னெடுப்போம்!
- நிலவுடமை யாளரிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்வோம்!
- கிராமங்கள் தோறும் மக்களின் அரசை நிறுவுவோம்!
- ஏகாதி பத்தியங்களிற்கும் தரகு முதலாளிய அரசிற்கும் எதிராக மக்கள் யுத்தப் பாதையில் புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம்!
- தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைப்போம்!

---

புத்தூர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்திற்கு அதைப் பெற்றுக் கொள்ளவோ அனுமதிக்கவில்லை.

புத்தூர் விவசாயிகள் குடியிருந்த நிலத்தை அவர்களுக்கு விலைக்கு கொடுக்கக்கூட தயாராக இல்லாத இந்த நிலவுடமையாளர், வேறொருவருக்கு அதை விற்க முன்வந்ததை தொடர்ந்து மேற்படி நிலத்தை விவசாயிகள் பறிமுதல் செய்துள்ளார்கள்.

கடந்தமாதம் 20ம் திகதி முதல் மேற்படி காணியை பறிமுதல் செய்து, வறிய கூலி விவசாயிகளை குடியேற்றுவதற்காக 25க்கு மேற்பட்ட குடிசைகளை அமைத்துள்ளார்கள். வறிய கூலி விவசாயிகள் சங்கம் என்ற ஸ்தாபனத்தின் தலைமையில் இவர்கள் இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக சாதித்துள்ளார்கள்.

விவசாயிகளின் போராட்ட எழுச்சியும் நிலப் புரட்சியை அவர்கள் நிறுவுவதனூடாகவுமே தமிழீழத்தின் புதிய சனநாயகப் புரட்சியை நாம் வெற்றிகரமாக சாதிக்க முடியும். புதியசனநாயகப் புரட்சியின் மைய அச்சு விவசாயிகள் நடாத்தும் நிலப்புரட்சியே வர்க்க ஒடுக்கு முறைக்கு எதிராக பரந்துபட்ட தொழிலாள விவசாயிகளின் எழுச்சியானது வளர்த்தெடுக்கப்பட்டு புதிய சனநாயகப் புரட்சிக்கான ஆயுத மேந்திய மக்கள் யுத்தப் பாதையில் வழிகாட்டப்பட வேண்டும். புத்தூர் விவசாயிகளின் போராட்டம் இக்குடியிருப்பு நிலத்தை பெற்றுக் கொள்வதுடன் நின்றுவிடாது புரட்சியை நோக்கி விஸ்தரிக்கப்பட வேண்டும். அரசியல் அதிகாரத்துக்கான நோக்கத்தின் அடிப்படையில் விவசாயிகள் தங்களை ஸ்தாபனமாக்கிக் கொள்ள வேண்டும்.

புத்தூர் விவசாயிகளின் மேற்படி வெற்றியானது, விவசாயிகளின் போராட்டத்திற்கு மேலும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஊட்டியுள்ளது.

வெல்க அவர்கள் போராட்டம்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தொடர்மாடி ..**

(12ம் பக்கத் தொடர்ச்சி)

விடும் முகமாக சுரண்டும் வர்க்கமானது சாதிரீதியான மோதல்களை வளர்த்துவிட முயற்சிக்கின்றது.

ஆரம்பத்தில் இவ்வீடுகளானது குருநகரில் உள்ள உயர் சாதிப்பிரிவினருக்கே முழுவதும் வழங்கப்படுவதாக இருந்தது தாழ்த்தப்பட்ட பிரிவினரின் ஆட்சேபத்தைத் தொடர்ந்து 160 வீடுகளில் 40 வீடுகள் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட போதும் உயர்சாதியைச் சேர்ந்த பண முதலைகள் இருசாதியினரிடையேயும் உள்ள வறிய வீடற்ற பிரிவினரிடையே எழுந்துள்ள போராட்ட உணர்வுகளைத் திசைதிருப்பி விடும்முகமாக, சாதிரீதியாகத் தமக்கென ஒருபகுதியைத் தனியாகப் பிரிக்கும்படி கோரிவருகின்றனர்.

எப்பொழுதும் சுரண்டும் வர்க்கங்களானது தமது சுரண்டலைத் தொடர்ந்து நடத்தவும், ஊழலைநியாயப் படுத்தவும் தமது பாரபட்ச நடவடிக்கைகளை மூடி மறைக்கவுமாக அவ்வப்போது சாதிரீதியான, மதரீதியான மோதல்களை கோஷ்டிச சண்டைகளை உருவாக்கி தொழிலாளரிடையே ஐக்கியத்தைக் குலைத்து இலாபம் தேடி வந்துள்ளன; வருகின்றன. இதன் வெளிப்பாடே இப்பிரச்சனையும்.

ஸ்ரீலங்கா தரகு முதலாளிய நிலப்பிரபுத்துவ பாஸிஸ அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இன்றைய நிலையில் சாதிமத ரீதியான ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் மறைந்துவிட்டன என்பதும் எல்லோரும் தமிழ்மக்கள், எல்லோருக்குமான தமிழ் ஈழம் என்பதெல்லாம் வெறும் பொய்யே. உண்மையில் இன்னும் சாதிரீதியான, மதரீதியான ஏற்றத்தாழ்வுகள் பாரபட்ச நடவடிக்கைகள் மறைந்துவிடவில்லை. மாருக பூசி மெழுகப்பட்டுள்ளன, அல்லது சமரசம் செய்து வைக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது சூடுபிடிக்கும்போதெல்லாம், தாழ்ந்த சாதியிருக்கு சம உரிமை என்ற கோஷம் வெடித்துக் கிளம்பும்போதெல்லாம் அது மோதல்களாகவும், கலவரங்களாகவும் உருவெடுக்கின்றன. அண்மையில்கூட குருநகரில் மிகப்பெரிய சாதிக்கலவரம் நடந்து முடிந்ததும் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் வீடுகளுக்குள் புகுந்து சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ததும் அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

இன்றிருப்பது சுரண்டல் சமூக அமைப்பாகும். இச்சமூக அமைப்பில் சாதிரீதியான மதரீதியான இனரீதியான மொழிரீதியான ஏற்றத்தாழ்வுகள் மோதல்கள் கலவரங்கள் தவிர்க்க முடியாததே.

ஆனல் இந்த சுரண்டல் சமூக அமைப்பினுல் லாபமடைகின்ற பண முதலைகளும், தரகு முதலாளிய நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங்களும், தமது சொந்த நலன்களுக்காக சாதிக்கலவரங்களை தூண்டிவிட்டு வருகின்றனர். உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்று வெறியை ஊட்டி சண்டைகளை உருவாக்கி தாம் லாபமடைகின்றனர். இதில் உண்மையில் பாதிக்கப் படுபவர்கள் இரு சாதியிலும் உள்ள சுரண்டப்படும் ஏழை மக்களே. உழைக்கும் மக்களான இவர்களிடையே பிளவுகளை பேணுவதன் மூலம் தமது சுரண்டலை தொடர்ந்து நடாத்தவே இத்தகைய சாதிப் பூசல்கள் உருவாக்கப்படுகின்றன.

இரு சாதியிலும் உள்ள உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து ஐக்கியப்பட்டு இந்த பிற்போக்காளர்களுக் கெதிரான போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே இவர்களை தனிமைப்படுத்தவும், ஒடுக்குமுறைகட்கு சாவுமணி அடிக்கவும் முடியும். இச் சுரண்டலமைப்பை தகர்த்தெறிகின்ற பரந்துபட்ட தொழிலாள விவசாயிகளின் தலைமையிலான புதிய சனநாயகப் புரட்சியை முன்னெடுப்பதன் மூலமே சாதீய மற்றும் அனைத்து சனநாயக ஒடுக்கு முறைகளுக்கும் நிரந்தரமான தீர்வு காண முடியும்,

---

**விடுதலை ...**

(12ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்து படுத்திருந்த வலையை அழித்து காங்கேசன்துறைப் பொலிஸ்நிலையத்தில் பத்திரமாக கொடுத்தனர். பாவம், அத்தொழிலாளிகள்! பொலிசு எந்த வர்க்கத்தை சார்ந்தது என அறியாததால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். அங்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இறுதியாக இப்பிரச்சனையை 'அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்' தலையிட்டு களங்கண்ணி காரர் பாலவாயிலில் இருந்து குறிப்பிட்டளவு தூரத்திற்கு அப்பால் வலையை போடவேண்டும் என்று சொல்லி ''நெளியலை நிமிர்த்திவிட்டார்''

களங்கண்ணி காரரிடையேயும் இலாப வேட்கை காரணமாக பாலவாயிலிற்கு நீ முந்தி, நான் முந்தி என்ற போட்டி இருந்துவந்த வேளையில் 21-8-85 இல் களங்கண்ணிவலை சேதப்படுத்தப்பட்டதாக களங்கண்ணிக் காரர் ஏனைய தொழிலாளர் மீது குற்றம் சாட்டினர் அதுவும் அநேக கிராமங்களில் இருந்து வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளில், அயல் கிராமமான பொன்னலை மேற்குத் தொழிலாளர் மீதே குற்றம் சுமத்தப்பட்டது.

முன்னர் அவர்களுக்குள் வரும் பிணக்குகள் பஞ்சாயத்தில் தீர்த்து வைக்கப்பட்டது. ஆனல் இப்பிரச்சனையை பஞ்சாயத்தார் இயக்கத்திடம் ஒப்படைத்தனர். மேற்குறித்த இரு இயக்கங்களும் தமது கூட்டு நடவடிக்கையாக இதனை ஆரம்பித்தனர்.

அதனுல் 22-8-85 இல் ஐந்து தொழிலாளிகள் இவ்விரு இயக்கத்தினராலும் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டு ஆதாரங்கள் இல்லை என்பதால் விடுவிக்கப்பட்டனர். மேலும் ஒரு வாரத்திற்குப் பின் 7 தொழிலாளர்களை மேற்குறிப்பிட்டதில் ஓர் அமைப்பு தனது முகாமிற்கு கொண்டு சென்றது. அங்கு மனித நேயமற்ற முறையில் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டும் தாம் வலையை சேதப்படுத்தவில்லை என்று உண்மையை கூறினார்களாம். மேலும் தாம் சித்திரவதையிலிருந்து விடுபடும் நோக்குடன் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சம்மதித்தனராம். அதனடிப்படையில் மக்கள் முன் ஒப்புக்கொண்டு, கையெழுத்திட்டு தலைக்கு 300/ வீதம் 10-9 இற்கு முன் தறபோதைக்கு நட்டஈடு கட்டுவதாகவும் ஒத்துக்கொண்ட பட்சத்தில் 7 பேரும் விடுவிக்கப்பட்டனர். விடுதலை இயக்கங்களும் பணக்காரர் பக்கமா என கொதிப்படைந்துள்ள தொழிலாளர்கள் ஒருகடற்றொழிலாளர் சங்கத்தை அமைத்து தொடர்ந்து போராடமுடிவு செய்துள்ளனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலை இயக்கங்களும் பணக்காரர்கள் பக்கமா?

## பொன்னாலை மீன்பிடித் தொழிலாளர்களின் கொதிப்பு!

பொன்னாலையிலிருந்து காரைநகருக்கு கடலினூடாக ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் கடல் தொழில் புரியும் இரு வெவ்வேறு பிரிவினர்க்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை தீர்த்து வைக்க தலையிட்டதில் இரண்டு விடுதலை இயக்கங்களின்' புரட்சிகர முகத்திரையின் மேலும் ஓர் படை கிழிந்துள்ளது. எவ்வளவுதான் புரட்சிகரச் சொற்களை உதிர்த்துக்கொண்டாலும் தமது வர்க்க பாசத்தினை தம்மையறியாமலே இவர்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

இதில் முதல் கட்டமாக இரு அமைப்புகளும் மேற்குறிப்பிட்ட இரு பிரிவினரில் மிகவும் ஒடுக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர் ஐந்து பேரை பிடித்து விசாரணை என்ற பெயரில் தாக்கினர். அடுத்த கட்டத்தில் அவற்றில் ஓரமைப்பு விசாரணையின் பெயரில் ஒப்புதல் வாக்குமூலம் எடுத்தது. மற்றைய அமைப்பு, தான் அடுத்த மே 1ம் திகதியில் தொழிலாளி வர்க்கத்தை சார்ந்து சிவப்பு எழுத்தில் மே தினம் கொண்டாட'', வேண்டியதை [illegible] அல்லவோ? தானாகவே விலகிக்கொண்டுவிட்டது.

மேற்குறிப்பிட்ட கடல்பரப்பில் இறால் தொழிலே கூடுதலாக செய்வதுண்டு. பிரதான வீதிக்கு குறுக்காக ஓர் பக்கத்திற்கு நீர் ஓட்டத்துடன் இறால் செல்லக்கூடியதாக 9 பாலங்கள் உள்ளன. இப்பாலங்களின் வாயில்களுக்கு கிட்ட வலைகளை நிரந்தரமாக விடுவதின்மூலம் தொகையாக இறால் பிடிபடும். இது களங்கண்ணி முறை எனப்படும். இம்முறையை செய்கிறதற்கு வலைக்காக குறித்தளவு முதல் தேவைப்படுகின்றது.

பிரச்சனைக்குரிய நான்கு பாலங்களை எடுத்து நோக்கும்போது களங்கண்ணி முறையை 10 இலும் குறைவான எண்ணிக்கை உடையோரே செய்கின்றனர். பெருமளவு முதல் இடவசதி குறைந்தவர்களான (சிறிய வலையை இழுத்து குறைவான எண்ணிக்கையுடைய 'கிலோ' இறால்களை பெற்று வாழ்க்கையை ஓட்டும்) தொழிலாளிகள், ஆயிரக்கணக்கில் தொழில் புரிகின்றனர். பாலத்தின் வாயிலுக்கு கிட்ட களங்கண்ணி முறை செய்வதினால் களங்கண்ணிக் காரருக்கு பெரு இலாபமும், ஆயிரக்கணக்கில் அவ்வப்போது வலையை இழுத்து தொழில்புரியும் தொழிலாளிகளுக்கு இறால் அகப்படுவது குறைவாகவும் இருக்கும். இதனால் இவர்களுக்கு இடையில் வர்க்க ரீதியான பகை நெடுநாளாக இருந்தே வந்தது.

பாலத்தின் வாயிலோடு சேர்த்து வழியை மறித்துக்கட்டுவதன் மூலம் இன்னும் கூடுதலான இலாபத்தையும் ஏனைய தொழிலாளிகள் மிகவும் குறைவான வருவாயையே பெறவேண்டி இருந்தது. இதனால் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இயலாத இத் தொழிலாளிகள் 1982ல் ஒரு போராட்டத்தில் குதித்தனர்.

அதாவது ''பாலத்தின் வாயிலோடு சேர்த்து களங்கண்ணி வலை போட இயலாது, குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பாலே போடவேண்டும்'' என்ற விதிமுறை இருந்தும் பாலத்தின் வாயிலோடு

11ம் பக்கம் பார்க்க

### கடத்தப்பட்ட

# இராஜசுந்தரம் எங்கே?

கடந்த மாதம் 'இனந்தெரியாத' நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட சுழிபுரம் இராஜசுந்தரம் இன்னும் விடுவிக்கப்படவில்லை. விசாரணைக்காக கடத்திச் செல்லப்பட்ட இந்த ஸ்ரீ லங்கா சு. கட்சிப் பிரமுகர் மீதான விசாரணை இன்னும் முடியவில்லையோ அல்லது அவர் 'தண்டிக்க'ப்பட்டு விட்டாரா? என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது.

'மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க' தலைவரான இவர் சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவராகவும் மூளாய் ஆஸ்பத்திரியின் இயக்குனர் சபையின் தலைவராகவும், இருந்த வாய்ப்புக்களை பயன்படுத்தி பல ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்பது பரவலாக மக்களால் பேசப்படுகிற ஒரு சங்கதி. 1975ம் ஆண்டு சங்கானை ப. நோ. கூ. இல் ஊழியர் வேலைநிறுத்தத்தில் குதித்தபோது சுரண்டும் அதிகாரவர்க்க வெறியுடன், அவர்கள் போராட்டத்தைச் சிறுமைப்படுத்தியதுடன், கருங்காலிகளை இட்டு நிரப்பி ஊழியர்களை வேலையிழக்கச் செய்தார்.

ஸ்ரீ லங்கா சு. கட்சி ஆட்சிக் காலத்தில் விருத்தியுற்ற அதிகாரவர்க்க முதலாளித்துவத்தின் பிரதிநிதியான இவர் 'சமூகத்தொண்டு' என்ற பெயரை தனது சுரண்டலுக்கு சாதகமாக பயன்படுத்திவந்துள்ளார்.

ஆயினும், இத்தகையவர்களையும்கூட 'கடத்திச் சென்று முடிவேயில்லாது 'விசாரிக்கும்' செய்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அவரை உடனடியாக விடுதலை செய்து, அவரது குற்றங்களையும் மோசடிகளையும் மக்கள்முன் அம்பலப்படுத்தவேண்டும்! ஊழல் பேர்வழிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவேண்டுமே அல்லாமல்,

'இராணுவப்' பாணியிலான விசாரணையும் 'மரண தண்டனை' களுமே எல்லாப் பிரச்சினைகட்கும் தீர்வாக அமைந்துவிடமுடியாது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்